| Article Date | Headline / Summary | Publication |
| --- | --- | --- |
| 14 Jul 2024 | To protect your car during rainy season... these are very important! | Nanayam Vikatan |

காப்பீட்டுத் திட்டம்

# மழைக் காலத்தில் உங்கள் காரைப் பாதுகாக்க... இவையெல்லாம் ரொம்பவே முக்கியம்!

பருவமழைக் காலம் தொடங்க இன்னும் சில மாதங்களே உள்ளன. கொளுத்தும் வெயில், அதிகரிக்கும் வெப்பம் என வாழும் நமக்கு மழை என்பது புத்துணர்ச்சி தரக்கூடிய ஒன்று. அதே சமயம், மழை சிலருக்கு சில சவால்களையும் கொண்டுவருகிறது. குறிப்பாக, கார் வைத்திருப்பவர்களுக்கு மழைக்காலம் என்பது சற்று சவாலானது. ஏனெனில், தண்ணீர் தேங்கி நிற்கும் தெருக்கள் முதல் விபத்துகளுக்கான மேடு பள்ளங்கள் வரை, மழைக்காலம் நம்முடைய வாகனங்களுக்குப் பல ஆபத்துகளை உருவாக்கலாம்.

எனவே, மழைக்கால சவால்களை எதிர்கொள்ள உங்கள் காரைத் தயார் படுத்துவது முக்கியம். பாதுகாப்பாக ஓட்டுவதை உறுதி செய்வது மட்டுமல்லாமல், உங்கள் வாகனத்தை சேதத்தில் இருந்து பாதுகாப்பதும் அவசியமாகும்.

**மழைக் காலங்களில் உங்கள் காரைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள முன்கூட்டியே தேவையான நடவடிக்கை எடுப்பது அவசியம்!**

### காப்பீட்டுத் திட்டங்கள்...

உங்கள் காரைப் பாதுகாப்பதற்கான மிகச் சிறந்த வழிகளில் ஒன்றாக, மழைக் காலத்தில் ஏற்பட வாய்ப்புள்ள சிக்கல்களைச் சமாளிக்க உதவும் காப்பீட்டுத் திட்டங்களைத் தேர்ந்தெடுத்து வாங்குவது அவசியம். அத்தகைய காப்பீட்டுத் திட்டங்களில், முக்கியமாக, இன்ஜின் பாதுகாப்பு கவர் உட்பட, உங்கள் காரை மழைக் காலத்துக்குத் தயார்படுத்த நீங்கள் அவசியம் கருத்தில் கொள்ள வேண்டிய காப்பீட்டுத் திட்டங்களை இங்கே பார்க்கலாம்.

### இன்ஜின் பாதுகாப்பு கவர்...

மழைக்காலத்தில் உங்கள் காரின் இன்ஜின் பாதிப்புக்கு உள்ளாகலாம். குறிப்பாக, தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளில் நீங்கள் அடிக்கடி பயணிப்பவர்களாக இருந்தால் இது பற்றி நிச்சயம் சிந்திக்க வேண்டும்.

அவ்வாறு பயணிக்கும்போது இன்ஜினுக்குள் தண்ணீர் புகுந்து சேதத்தை மோசமாக்கலாம். இந்த சேதத்துக்கான கவரேஜ் வழக்கமான கார் இன்ஷூரன்ஸ் பாலிசிகளில் கிடைக்காமல் போக வாய்ப்புள்ளது.

இதற்காகவே பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டு இருப்பதுதான் இன்ஜின் பாதுகாப்பு கவர் பாலிசி *(Engine Protection Cover Policy)*. இதை எடுத்துக்கொள்வதன் மூலம் இன்ஜின் சேதத்துக்கான கவரேஜை நம்மால் பெற முடியும்.

**சுபாசிஷ் மஜூம்தார்,**
தலைவர் - மோட்டார் பாலிசி விநியோகம், பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல் இன்ஷூரன்ஸ்





இந்தக் கூடுதல் பாலிசியில் இன்ஜினுக்குள் தண்ணீர் புகுந்து உண்டாக்கும் பாதிப்பு உள்ளிட்ட காரணங்களால் இன்ஜின் மற்றும் அதன் பாகங்கள் சேதமடைந்தால், அவற்றைப் பழுது பார்ப்பதற்கும் அல்லது மாற்றும் செலவுகளுக்கான கவரேஜ் கிடைக்கும்.

இன்ஜின் பாதிப்புகளுக்கு ஆகும் செலவுகள் ஆயிரக்கணக்கிலிருந்து லட்சங்கள் வரைகூட ஆகலாம் என்பதால், கார் உரிமையாளர்கள், இன்ஜினுக்கான கவர் உள்ள 'ஆட் ஆன் பாலிசி'யை *(Add-on Policy)* எடுத்துக்கொள்வது அவசியம். இதை துணை பாலிசிகள் *(Riders)* என்றும் சொல்வார்கள். காப்பீடு எடுக்கும் போதே இவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**ஜீரோ தேய்மான கவர்...**

மற்ற சொத்துகளைப் போலவே, கார்களும் காலப்போக்கில் தேய்மானத்துக்கு உள்ளாகின்றன. இதனால் உங்கள் காரின் மதிப்பு அதன் வயதுக்கேற்ப குறைகிறது. மழைக்காலங்களில், சாலைகள் வழுக்கக்கூடிய நிலையிலும், பள்ளம் மேடுகளை சரியாகக் கணிக்க முடியாத வகையிலும் இருப்பதால், விபத்துகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமிருக்கும்.

அந்தச் சமயங்களில் சேதத்துக்குள்ளாகும் வாகனங்களுக்கு க்ளெய்ம் செய்யும்போது, அதன் வழக்கமான காப்பீட்டில் கார் மற்றும் அதன் பாகங்களின் தேய்மானம் கணக்கிடப்படும். அவ்வாறு கணக்கிடும்போது தேய்மானத்தில் நமக்குக் கிடைக்கும் க்ளெய்ம் தொகை குறையலாம்.

அதுவே ஜீரோ தேய்மானத்துக்கான *(Zero Depreciation)* ரைடர் கவரையும் சேர்த்து எடுத்துக்கொண்டால், தேய்மானத்தைக் கணக்கிடாமல் சேதமடைந்த காரை சரி செய்வதற்கான மொத்த செலவையும் பெறுவதை உறுதி செய்ய முடியும். இதனால் வாகனத்தைச் சரிசெய்ய ஆகும் செலவுக்கு



Page 2 of 3.

உங்கள் பாக்கெட்டிலிருந்து எந்தவித தொகையும் தராமல் இருக்கலாம். முழுமையான, மன அமைதியான நிதிப் பாதுகாப்புக்கு இந்த கவர் உதவுகிறது.

**சாலையோர உதவிக்கான கவர்...**

மழைக்காலத்தில் வாகனங்கள் பழுதடைந்தோ விபத்தில் சிக்கியோ தவிப்பதற்கு அதிக வாய்ப்புள்ளது. எனவே, வாகனத்துக்கான இன்ஷூரன்ஸ் பாலிசியில் சாலையோர உதவிக்கான கவரேஜையும் (*Roadside Assistance Cover*) சேர்த்து எடுத்துக்கொள்ளும்போது, அவசர நேரத்தில் உதவிக்கு அழைக்கவும், எரிபொருள் விநியோகம், பேட்டரி ஜம்ப்-ஸ்டார்ட், சம்பவ இடத்திலேயே செய்யக்கூடிய பழுதுபார்த்தல் போன்ற சேவைகளைப் பெறுவதற்கும் ஆகும் செலவைச் சமாளித்துக் கொள்ளலாம்.

இந்த கவரேஜின் மூலம் வாகனங்கள் மழையில் சிக்கிக்கொள்வதால் ஏற்படும் மன அழுத்தம் மற்றும் சிரமத்தைத் தவிர்க்கலாம். மேலும், பாதுகாப்பாகச் சென்று சேர வேண்டிய இடத்துக்குப் போவதையும் உறுதி செய்யலாம்.

**கன்ஸ்யூமபள்ஸ் கவர்...**

வெள்ளத்தில் மூழ்கும் சாலைகள் மற்றும் கனமழையில் காரில் உள்ள இன்ஜின் ஆயில், பிரேக் ஆயில், லூப்ரிகன்ட், நட் போல்ட்டுகள் மற்றும் இதர பொருள்கள் அதிகமான தேய்மானத்துக்கும் பாதிப்புக்கும் உள்ளாகும். இவற்றை மாற்றும் செலவுகள் வழக்கமான காப்பீட்டுத் திட்டங்களில் கவர் ஆகாது. இது போன்ற கன்ஸ்யூமபள்ஸ் (*Consumables*) பொருள் களுக்கான செலவுகளைக் கவர் செய்ய, அதற்கான 'ஆட் ஆன் கவரை'யும் வாங்கிக் கொள்வது மழைக்காலத்தின்போது ஏற்படும் கூடுதல் செலவுகளிலிருந்து காப்பாற்ற உதவும்.

**டயர் பாதுகாப்பு கவர்...**

மழைக்காலத்தில் சாலைகளில் பள்ளங்கள் உண்டாக அதிக வாய்ப்பிருக்கிறது. பள்ளங்களால் காரின் டயர்கள் சேதமடையும் அபாயமும் உள்ளது. எனவே, காருக்கான இன்ஷூரன்ஸ் திட்டத்தில் டயர் பாதுகாப்புக் கான கவரேஜையும் (*Tyre Protection Cover*) எடுத்துக்கொண்டால், டயர்களில் உண்டாகும் வெட்டுக்கள், வெடிப்புகள் அல்லது வீக்கம் காரணமாக ஏற்படும் சேதம் போன்றவற்றைப் பழுதுபார்ப்பதற்கு அல்லது மாற்றுவதற்கு ஆகும் செலவுகளுக்கான கவரேஜ் கிடைக்கும்.

தரமான பிரீமியம் டயர்களின் விலை அதிகமாக இருப்பதால், மழைக்காலம் முழுவதும் உங்கள் காரின் டயர்கள் நல்ல நிலையில் இருப்பதையும், டயர்களுக்கான செலவுகளைச் சமாளிப்பதை உறுதி செய்வதையும் இந்த கவர் பார்த்துக்கொள்ளும்.

பருவமழைக் காலங்களில் உங்கள் காரைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள முன்கூட்டியே தேவையான நடவடிக்கைகளை எடுப்பது மிக முக்கியமானது. மிகவும் முக்கியமான இன்ஜின் பாதுகாப்பு கவர் உட்பட மேற்குறிப்பிட்ட அத்தியாவசிய கவரேஜ்கள் அடங்கிய காப்பீட்டுத் திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், மழைக்காலத்தில் வரக்கூடிய எதிர்பாராத சவால்களுக்கு எதிராக உங்கள் வாகனத்தையும், நிதிநிலையையும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

அது மட்டுமல்ல, இன்றைய நிலையில் காப்பீட்டு நிறுவனங்கள் கார்களுக்கான எலெக்ட்ரிகல், மெக்கானிக்கல் தொடர்பான சேதங்களுக்கும் (விபத்து காரணமான சேதங்கள் தவிர்த்து), அதிக விலக்குகள் இல்லாத கவரேஜ்களுக்கும், பாலிசி காலத்தில் பெறக்கூடிய இன்னும் பல அம்சங்களை உள்ளடங்கிய 'ஆட் ஆன் கவர்' பாலிசிகளை வழங்குகின்றன. காப்பீட்டு நிறுவனங்கள் ஒரே நேரத்தில் பல இழப்பு/சேதங்கள் தொடர்பாக புகார் அளிக்கும் நெகிழ்வுத்தன்மையையும் வழங்குகிறார்கள்.

இத்தகைய 'ஆட்-ஆன் கவர்'கள் தனித்தனியாக பாலிசிகளை எடுக்க வேண்டிய தேவையை நீக்கி, காப்பீடு செய்தவரை கவலை இல்லாமல் இருக்க உதவுகிறது. இவை நிதிப் பாதுகாப்பை வழங்குவதுடன், மழைக்காலங்களில் எந்தக் கவலையும் இல்லாமல் சாலைகளில் நம்பிக்கையுடன் பயணிப்பதையும் உறுதிப்படுத்துகின்றன. எனவே, உங்கள் காருக்கு சரியான 'ஆட் ஆன் கவர்'கள் அனைத்தும் அடங்கிய காப்பீட்டுத் திட்டத்தை எடுப்பதன் மூலம், மழைக்காலத்தில் வாகனத்தைப் பாதுகாத்துக்கொள்வதுடன் கவலை இல்லாத பயண அனுபவத்தைப் பெறுவதையும் உறுதி செய்துகொள்ளலாம்!